**சுங்க உத்தியோகத்தர்களது முகாமைத்துவ மற்றும் இழப்பீட்டு நிதியம் - 2015**

சுங்க உத்தியோகத்தர்களது முகாமைத்துவ மற்றும் இழப்பீட்டு நிதியத்தின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. திணைக்களத்தின் வருடாந்த அறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனதுகணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீதுஅபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். என்னால் உயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச கணக்காய்வு நியமங்களுக்கு ஒத்ததாக (ISSAI 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் அற்றன என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கும் கணக்காய்வு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான நடைமுறைகள் கணக்காய்வில் உள்ளடங்கும். மோசடிஅல்லதுதவறுகள் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய போதியளவு தவறான கூற்றுக்களினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவுசெய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிதியத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காகவல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்தச் சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 முனைப்பழியுள்ளஅபிப்பிராயத்திற்கானஅடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

---------------------------

## 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து சுங்க உத்தியோகத்தர்களது முகாமைத்துவ மற்றும் இழப்பீட்டு நிதியத்தின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டில் வேலை பூர்த்தி செய்யப்பட்டிருந்த 19 சம்பவங்களின் கோவைகளுக்குரிய ரூபா 4,875,474 கூட்டுத்தொகையான தேறிய வருமானமொன்று நிதிக்கூற்றுக்களில் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் போது நடைமுறையல்லாத சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வு ரூபா 416,520 குறைத்து நிதிஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

### 2.2.2 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சுங்கக் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் மீளாய்வாண்டில் அண்ணளவாக ரூபா 612,230,436 தொகை நிதியத்திற்கு செலவிடப்பட வேண்டிய போதிலும் உள்ளவாறாக ரூபா 588,065,426 தொகை செலவு வைக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ரூபா 24,165,010 வருமானத்தில் குறைவொன்று அவதானிக்கப்பட்டதுடன் அதற்கான காரணங்கள் தெளிவுபடுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிதியத்தின் பெறுவனவுகள் மற்றும் கொடுப்பனவுகளுக்குரிய திறைசேரி அச்சீட்டுக் குறிப்புக்கள் மற்றும் திணைக்களத்தின் புத்தகங்களுக்குமிடையே முறையே ரூபா 3,635,649 மற்றும் ரூபா 5,709,657 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டன.

## 3. நிதி மீளாய்வு

## 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான நிதியத்தின் செயற்பாட்டு மிகை ரூபா 450,789,616 ஆக இருந்ததுடன் இதனோடொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 394,048,926 ஆனமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 56,740,690 ஆன அதிகரிப்பு காணப்பட்டது. இதற்காக நிதியத்தின் தண்டப்பண வருமானம் மற்றும் கைப்பற்றப்பட்ட பொருட்களின் விற்பனை வருமானம் முறையே ரூபா 56,787,933 ஆலும் ரூபா 15,053,753 ஆலும் அதிகரித்தமை பிரதானமாகத் தாக்கமளித்திருந்தது.

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய 04 ஆண்டுகளின் நிதி விளைவுகளை பகுப்பாய்வு செய்த போது 2011 ஆம் ஆண்டில் ரூபா 232,622,256 ஆன நிதியத்தின் விளைவுகள் 2013 ஆம் ஆண்டளவில் ரூபா 478,770,293 வரை அதிகரித்திருந்த போதிலும், 2014 ஆம் ஆண்டளவில் அது ரூபா 394,048,926 வரை வீழ்ச்சியடைந்திருந்தது. 2015 ஆம் ஆண்டின் போது அது ரூபா 450,789,616 வரை மீண்டும் அதிகரிப்பொன்று தென்பட்டது. நடைமுறையல்லாச் சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வினைக் கருத்திற் கொள்ளும்

போது 2011 ஆம் ஆண்டில் ரூபா 232,938,001 தொகையான நிதியத்தின் பங்களிப்பு 2013 ஆம் ஆண்டின் போது ரூபா 484,905,593 வரை அதிகரித்திருந்த போதிலும், 2014 ஆம் ஆண்டளவில் ரூபா 426,861,292 வரை குறைவடைந்திருந்தது. மீளாய்வாண்டின் போது அது ரூபா 483,597,854 வரை மீண்டும் அதிகரித்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

1869 இன் 17 ஆம் இலக்க சுங்க கட்டளைச் சட்டத்தின் 153(ஆ) பிரிவின் பிரகாரம் இந்நிதியத்தின் நோக்கங்கள் பின்வருமாறு.

பல்வேறு சுங்கப் தவறுகளுக்காக விதிக்கப்படும் தண்டப் பணம் மற்றும் அரசுடைமையாக்கப்பட்ட பொருட்களின் விற்பனையிலிருந்து பெறப்பட்ட தொகையில் 20 சதவீதத்திற்கு சமனான பணம் சுங்க உத்தியோகத்தர்களது முகாமைத்துவ மற்றும் இழப்பீட்டு நிதியத்திற்கு செலவு வைக்கப்படுவதுடன் சுங்க உத்தியோகத்தர்களது முகாமைத்துவ ஆற்றலை மேம்படுத்துவதற்காக உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் செலவிடுவதற்கும் விபத்திற்குட்பட்ட உத்தியோகத்தர்களுக்கும் இழப்பீடு செலுத்துவதற்குமாகும்.

(அ) மேற்குறித்த நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக முறையான எதிர்வு கூறலொன்று மற்றும் திட்டமொன்று இல்லாமல் சுங்க கட்டளை அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் வருடக் கணக்காக இந் நிதியத்திற்கு பணம் ஒதுக்கப்படுவதால் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் நிதியத்தின் திரட்டிய மீதி ரூபா 4,731 மில்லியனாக இருந்தது. அது முன்னைய ஆண்டின் மீதியை விட ரூபா 448 மில்லியன் அதாவது 10.45 சதவீதமான அதிகரிப்பொன்றாகும்.

நிதியத்தின் திரண்ட மீதி தொடர்ச்சியாக அதிகரிப்பதற்காக பின்வரும் காரணங்கள் அடிப்படையாக தாக்கமளித்திருந்தது.

(i) சுங்க வரி மோசடிகளில் கட்டுப்பாடொன்று அவதானிக்கப்படாமை மற்றும் மோசடிகளில் தொடர்ச்சியான அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டமை. முன்னைய 05 ஆண்டு காலப்பகுதியில் நிதியத்திற்கு பணம் கிடைத்திருந்த சுங்க புலனாய்வுகளின் எண்ணிக்கை அதிகரித்தமை மற்றும் சுங்க தவறுகளின் நிதிசார் பெறுமதி அதிகரித்தல் தொடர்பான தரவுகள் சில கீழே காட்டப்பட்டுள்ளது.

| ஆண்டு | புலனாய்வுகளின் எண்ணிக்கை | சுங்க தவறுகளில் நிதிசார் பெறுமதியில் நிதியத்திற்கு ஒதுக்கப்பட்ட பணத்தின் அளவு ரூபா |
|---|---|---|
| 2011 | 128 | 282,001,680 |
| 2012 | 183 | 362,419,680 |
| 2013 | 200 | 592,887,505 |
| 2014 | 258 | 516,223,741 |
| 2015 | 296 | 588,065,427 |

(ii) சுங்க தவறுகளுக்காக தண்டம் விதிக்கும் போது அரசிற்கு இழக்கப்பட்ட வரி வருமானமும் அத் தண்டத்தின் பகுதியாக கருதிய காரணத்தினால் உத்தியோகத்தர்களுக்கு செலுத்தும் வெகுமதி நிதிப் பணத்தின் பெறுமதி அதிகரித்துச் சென்றதுடன் இந் நிதியத்திற்கு ஒதுக்கப்பட்ட தொகையின்

பெறுமதியும் அதிகரித்துச் சென்றமை அவதானிக்கப்பட்டது.

(iii) தற்போது நிலவும் திறந்த பொருளாதார கொள்கை காரணமாக இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதியிலும் ஏற்பட்டுள்ள பிணைப்புக்களுக்கு இணங்கும் வகையில் சுங்க கட்டளைச் சட்டம் உட்பட இந் நிதியங்களின் சட்ட ஏற்பாடுகளை முறையாகவும் காலரீதியாகவும் திருத்தம் செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டில் நிதியத்தின் வருமானம் ரூபா 588 மில்லியனாக இருந்த போதிலும், நிதியத்தின் அடிப்படை நோக்கத்திற்காக செலவிடப்பட்ட தொகை அண்ணளவாக ரூபா 73 மில்லியன் ஆகும். இதன் பிரகாரம் நிதியத்தின் நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக முறையான திட்டமொன்று இல்லாமல் தொடர்ச்சியாக நிதி ஒதுக்கீடு செய்யப்படுகின்றது என்பது அவதானிக்கப்படுகின்றது.

(இ) இந் நிதியத்தின் அடிப்படை நோக்கங்களில் இரண்டில் ஒன்றாக சுங்க உத்தியோகத்தர்கள் தமது கடமைகளில் ஈடுபடும் போது ஏற்படும் அனர்த்தங்களுக்கு இழப்பீட்டு கொடுப்பனவு இனங்காணப்பட்டிருந்த போதிலும், பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட முன்னைய 05 ஆண்டு காலப்பகுதியில் எவ்வித நட்டஈட்டுக் கொடுப்பனவொன்றும் அவதானிக்கப்படவில்லை. அதன் பிரகாரம் அந் நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக தொடர்ந்தும் இந் நிதியத்திற்கு அசாதாரணமாக நிதி சேகரித்தல் கணக்காய்வின் போது கேள்விக்குரியதாக இருந்தது.

(ஈ) பிரதான நோக்கங்களுக்கு புறம்பாக நடைமுறையல்லாச் சொத்துக்களை கொள்வனவு செய்தல், வாகன பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு சேவைகள் போன்ற செலவின விடயங்களுக்காக மீளாய்வாண்டின் போது ரூபா 14 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது.

### 4.2 வேறு அரச நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட நிதியத்தின் வளங்கள்

மீளாய்வாண்டில் இலங்கை துறைமுக அதிகாரசபைக்கு உரித்தான கட்டிடமொன்றுக்கு பூச்சுக்கள் பூசுவதற்காக கட்டிட பராமரிப்பு செலவினமாக ரூபா 653,682 தொகை முகாமைத்துவ மற்றும் இழப்பிட்டு நிதியத்திலிருந்து செலவிடப்பட்டிருந்தது.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2006 திசெம்பர் 22 ஆம் திகதிய பீஎவ்/423 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் நிதியத்தின் வருடாந்த செயலாற்றல் அறிக்கை மற்றும் நிதிக்கூற்றுக்கள், கணக்காண்டு முடிவடைந்து 02 மாதத்திற்குள் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் 2016 ஏப்ரல் 27 ஆம் திகதியே சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

### 5.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

நிதியத்தின் 02 செலவின விடயங்களுக்காக பாதிடப்பட்ட வருமானத்திற்கும் உள்ளபடியான வருமானத்திற்குமிடையே 100 சதவீதம் மற்றும் 34 சதவீதம் என முரண்கள் காணப்பட்டதுடன் 2 செலவின விடயங்களுக்குரிய பாதிடப்பட்ட செலவினத்திற்கும் உள்ளபடியான செலவினத்திற்குமிடையே 78 சதவீதம் முதல் 127 சதவீதம் ஆன முரண்கள் காணப்பட்டன. அதன் பிரகாரம் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுச் சாதனமாகப் பயன்படுத்தப்பட்டிருக்காமை அவதானிக்கப்பட்டது.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

-----------------------------------------------------

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் தொடர்பாக அவ்வப்போது சுங்கப் பணிப்பாளர் நாயகத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| **முறைமைகளும் கட்டுப்பாட்டுத் துறைகளும்** | | **அவதானிப்புக்கள்** |
|---|---|---|
| (அ) | வெளிநாட்டு பயிற்சிக்காக உத்தியோகத்தர்களை தெரிவு செய்தல் | முறையான நடைமுறையொன்று பின்பற்றப்படாமல் வெளிநாட்டுப் பயிற்சி நடவடிக்கைகளுக்காக உத்தியோகத்தர்களைத் தெரிவுசெய்தல் |
| (ஆ) | வருமான சேகரிப்பு | நிதியத்திற்கு கிடைக்கவேண்டிய வருமானம் மற்றும் கிடைக்கப் பெற்ற வருமானம் என்பவற்றை ஒப்பீடுவதற்கான முறையான நடைமுறையொன்று இல்லாமை. |